**Deposition of Witness**
**In the Court of Additional Subordinate Judge, Tenkasi.**

Mcop 209/2023

எ.ம.சா 1 திருமலைக்கனி

| | | |
|---|---|---|
| Name | : | திருமலைக்கனி |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Occupation | : | |
| Age | : | |
| Date | : | 25.02.2026 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை

நான் தற்போது சங்கரன்கோவில் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் கணக்கராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கில் சாட்சியம் அளிக்க வட்டார போக்குவரத்து அலுவலருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. எனக்கு சாட்சியம் அளிக்க வழங்கப்பட்ட அங்கீகார கடிதம் மூ.த.சா.ஆ 1. அழைப்பாணையில் சொல்லப்பட்டுள்ள டி.என்.65 ஏவி.1293 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை தாக்கல் செய்கிறேன். அந்த 8.6.2023 தேதியிட்ட மோட்டார் வாகன ஆய்வாளர்அறிக்கை மூ.த.சா.ஆ 2. 19.6.2023 தேதியிட்ட டி.என்.76.ஏ.யூ.2356 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை தாக்கல் செய்கிறேன். டி.என்.76.ஏ.யூ.2356 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் மூ.த.சா.ஆ 3. டி.என்.65 ஏவி.1293 என்ற வாகனத்திற்கு விபத்து நடந்த தேதியில் தகுதி சான்று இல்லை என்ற விபரம் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை காலம் 9 ல் சொல்லப்பட்டுள்ளது. தகுதிசான்று இல்லாமல் வாகனத்தை இயக்குவது

மோட்டார் வாகன விதிகளுக்கு எதிரானதாகும்.

மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

டி.என்.76.ஏ.யூ.2356 என்ற வாகனத்தை பொறுத்த வரை எந்த ஒரு விதிமீறலும் இல்லை என்றால் சரியல்ல. ஓட்டுனர் உரிமம் இல்லை. ம.சா.ஆ 6 ஓட்டுனர் உரிமம் இறந்து போன வேல் முருகன் என்பவருக்கு கொடுக்கப்பட்டது என்றால் அது பற்றி தெரியவில்லை. ஆய்வின்போது சமர்ப்பிக்கப்படவில்லை. விபத்தில்இறந்து போன வழக்குகளை பொறுத்து ஓட்டுனர்உரிமத்தை முன்னிலைப்படுத்தினால் அதை ரத்து செய்து விடுவார்கள்என்பதால் அதனை மோட்டார் வாகன ஆய்வாளரிடம் ஆஜர்படுத்துவது கிடையாது என்றால் சரியல்ல. ஓட்டுனர் உரிமம் இல்லை என்பதும், அதனை ஆஜர்செய்வது இல்லை என்பது வேறு என்றால் சரிதான். அசல் ஓட்டுனர்உரிமத்தை முன்னிலைப்படுத்தாத போது ஓட்டுனர் உரிமம் முன்னிலைப்படுத்தவில்லை என எழுதப்படும் என்றால் சரிதான். டி.என்.65 ஏவி.1293 என்ற லாரியை பொறுத்த வரை தகுதிசான்று இல்லை என்ற ஒரே குறைபாடு என்றால் சரிதான். மோட்டார் வாகன சட்டவிதிகளுக்கு முரணாக இருந்தால் அதற்கு செக்ரிப்போர்ட் கொடுப்பது வழக்கம் என்றால் சரிதான். இந்த இரண்டு வாகனங்களை பொறுத்து எவ்விதமான செக்ரிப்போர்ட் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அவ்வாறு தான் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது. தகுதிசான்றிதழை அபராதத்துடன் புதுப்பித்து கொள்ளலாம் என்றால் புதுப்பித்த தேதியில் இருந்து தான் தகுதிசான்று ஊர்ஜிதத்திற்கு வரும். அதற்கு முன்னர் இருந்த நாட்களுக்கு வராது. நான் சொல்வது தவறு என்றும், தகுதி சான்றுபுதுப்பிக்கப்பட்டு விட்டால்

முந்தையை தேதிக்கும் சேர்த்து புதுப்பிக்கப்படும் என்றால் சரியல்ல. மோட்டார்வாகன ஆய்வாளரை தவிர்த்து மோட்டார் வாகன உதவி ஆணையரிடம் புதுப்பிக்கலாம் என்றால் எனக்கு தெரியாது. உதவி ஆணையரிடம் புதுப்பிக்கும் தகுதிசான்று எங்களது அலுவலகத்தில் இருக்காது என்றால்அது பற்றி தெரியாது. அந்த ஆவணங்களை முறைப்படி பரிசீலனை செய்தால் தகுதிசான்ற இருந்திருக்கும்என்பது தெரியவரும் என்றால் சரியல்ல. மோட்டார் வாகன விதிகளுக்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் என் சாட்சியம் ஏற்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

(இந்த குறுக்குவிசாரணை வீடியோ கான்பரன்சில் பதிவு செய்யப்பட்டது)

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.